# சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

## சபரகமுவ மாகாண சபையின் அரச சேவை ஆணைக்குழுவின் தொழில்நுட்பவியல் சேவையின் வரைவாளர் தரம் III / வரைவாளர் பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) வரைவாளர் பயிற்சி தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) ஆட்சேர்ப்பதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை-2026

---

சபரகமுவ மாகாண சபையின் அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக சபரகமுவ மாகாணத்தில் வசிக்கும் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. சபரகமுவ மாகாண சபையின் அரச சேவையின் தொழில்நுட்ப சேவையின் வரைவாளர் தரம் III

II. சபரகமுவ மாகாண சபையின் அரச சேவையின் தொழில்நுட்ப சேவையின் வரைவாளர் பயிற்சித்தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம் )

III. சபரகமுவ மாகாண சபையின் அரச சேவையின் தொழில்நுட்ப சேவையின் வரைவாளர் பயிற்சித்தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம் )

02. **விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி :- 13.03.2026**

விண்ணப்பதாரர் 13.03.2026 திகதிக்குள் அனைத்து விதத்திலும் தொடர்புடைய தகுதிகளையும் நிர்ணயிக்கப்பட்ட வயது எல்லையையும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே சேவையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படுவார். 13.03.2026 ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்கும் துறைக்கு பொருத்தமான கல்வி மற்றும் தொழில் முறை தகுதிகளைப் பெற்றிருப்பது கட்டாயமாகும்.

03.

3.1 பொதுத் தகைமைகள் :-

(அ). விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.

(ஆ). சிறந்த நடத்தை மற்றும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(இ). எந்தவொரு மதப் பிரிவையும் சார்ந்த மதகுருமார்களும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

(ஈ). 13.03.2026 திகதிக்கு விண்ணப்பதாரர் சபரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருப்பதுடன் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்கு நிரந்தர வதிவு இல்லையெனின் , விண்ணப்பதாரியின் துணைவர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு (13.03.2026) கிட்டிய 3 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல்.

(உ). விண்ணப்பதாரியின் வயது 13.03.2026 திகதிக்கு 18 வயதிற்கு குறையாத 30 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

3.2 கல்வி மற்றும் தொழிற்தகைமைகள்

| பதவி | கல்வித் தகைமைகள் | | தொழிற்தகைமைகள் |
|---|---|---|---|
| | பதவிக்குரிய கா.பொ.த (சா.த) தகைமைகள் | பதவிக்குரிய கா.பொ.த (உ.த) தகைமைகள் | |
| வரைவாளர் தரம் III | தாய் மொழி (சிங்களம்/ தமிழ் /ஆங்கிலம் மொழி) கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமை சித்தியுடன் கூடிய ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கா.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத் தல். | I. கா.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் கணிதப் பிரிவில் இணைந்த கணிதம் , பௌதீக விஞ்ஞானம் , இரசாயன விஞ்ஞானம் , உயர் கணிதம் ஆகிய பாடங்கள் 03 இல் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்(பொது பரீட்சை மற்றும் ஆங்கிலம் தவிர்த்து)<br>அல்லது<br>II. கா.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் , தொழில்நுட்ப விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக தொடர்பாடல் தொழில்நுட்பம் கணிதம் / சித்திரக்கலை / விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் 01 உடன் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும் (பொது பரீட்சை மற்றும் ஆங்கிலம் தவிர்த்து) | குறித்த துறை தொடர்பான தேசிய தொழிற் தகைமை மட்டம் (NVQ 6) இனைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>குறிப்பு :-மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பிரிவின் கீழும் வரைவாளர் குறித்த துறை தொடர்பான தொழில்முறை தகுதியைப் பெற்றிருப்பது கட்டாயமாகும். |

| பதவி | கல்வித் தகைமைகள் | | தொழிற்தகைமைகள் |
|---|---|---|---|
| | பதவிக்குரிய கா.பொ.த (சா.த) தகைமைகள் | பதவிக்குரிய கா.பொ.த (உ.த) தகைமைகள் | |
| வரைவாளர் பயிற்சித்தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம் | தாய் மொழி (சிங்களம்/ தமிழ் /ஆங்கிலம் மொழி) கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமை சித்தியுடன் கூடிய ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கா.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | I.கா.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் கணிதப் பிரிவில் இணைந்த கணிதம் , பௌதீக விஞ்ஞானம் , இரசாயன விஞ்ஞானம் , உயர் கணிதம் ஆகிய பாடங்கள் 03 இல் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் அல்லது<br>II. கா.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் , தொழில்நுட்ப விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக தொடர்பாடல் தொழில்நுட்பம் கணிதம் / சித்திரக்கலை / விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் 01 உடன் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும் (பொது பரீட்சை மற்றும் ஆங்கிலம் தவிர்த்து) | I. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியில் வரைவு துறையில் ஒரு வருட முழுநேர பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல். அல்லது<br>II. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்படி தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமனானவை என மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்ப தகைமைகள் |

| பதவி | கல்வித் தகைமைகள் | | தொழிற்தகைமைகள் |
|---|---|---|---|
| | பதவிக்குரிய கா.பொ.த (சா.த) தகைமைகள் | பதவிக்குரிய கா.பொ.த (உ.த) தகைமைகள் | |
| வரைவாளர் பயிற்சித்தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம் | தாய் மொழி (சிங்களம்/ தமிழ் /ஆங்கிலம் மொழி) கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமை சித்தியுடன் கூடிய ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கா.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | I. கா.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் கணிதப் பிரிவில் இணைந்த கணிதம் , பௌதீக விஞ்ஞானம் , இரசாயன விஞ்ஞானம் , உயர் கணிதம் ஆகிய பாடங்கள் 03 இல் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் அல்லது<br>II. கா.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் , தொழில்நுட்ப விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக தொடர்பாடல் தொழில்நுட்பம் கணிதம் / சித்திரக்கலை / விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் 01 உடன் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும் (பொது பரீட்சை மற்றும் ஆங்கிலம் தவிர்த்து) | பொருத்தமற்றது. |

குறிப்பு :

I. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் விதிகள் மற்றும் 7.1 இன் குறிப்புகளின்படி வரைவாளர்களின் தற்போதைய வெற்றிடங்களில் 70% வெளிப்புற விண்ணப்பதாரிகளுக்கான திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் நிரப்பப்படும். . 30 % மட்டுப்படுத்தப்பட்ட போட்டித் தேர்வின் மூலம் நிரப்பப்படும் . அதன்படி திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் நிரப்ப வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 5 ஆகும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டித் தேர்வின் மூலம் நிரப்பபட்ட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 02 ஆகும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும் சதவீதத்திற்கு போதுமான அடிப்படை தகுதிகளைக் கொண்ட சபரகமுவ மாகாண சபையின் திணைக்களங்கள் / அமைச்சுக்களில் விண்ணப்பதாரிகள் இல்லை என்றால் மட்டுமே , மீதமுள்ள எண்ணிக்கை திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட வெளிப்புற விண்ணப்பதாரிகளிடம் இருந்து நிரப்பப்படும்

II. சபரகமுவ மாகாண சபை அரச சேவையின் தொழில்நுட்ப சேவையின் வரைவாளர் தரம் III மற்றும் தொழில்நுட்ப சேவையின் பயிற்சி தரங்களுக்கான ஆட்சேர்ப்பில் , முதலில் ஆட்சேர்ப்பு தரம் III க்கு ஆகும். தரம் III க்கு தகுதி பெறும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லாதபோது மீதமுள்ள வெற்றிடங்கள் பயிற்சி தரத்திற்கு பொருத்தமான தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும்.

**04. சம்பள அளவுத் திட்டம்**

I. இலக்கம் 10/2025 மற்றும் 25.03.2025 ஆம் திகதி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய ,இந்தப் பதவிகளின் III தரத்திற்கான சம்பள வகுதி MN 3 -2025 மற்றும் மாதாந்த சம்பள அளவு ரூ.52,250/--10x800-11x1190-10x1320-10X1350-ரூ100,040/- ஆகும்.

II. வரைவாளர் பயிற்சித்தரம் தொடர்பான கொடுப்பனவு
அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக 10/2025 அட்டவணை (VI) அமைய மாதாந்தக் கொடுப்பனவு –

I. தொழில்நுட்ப சேவை I வருடம் ரூ.43,274/-

II. தொழில்நுட்ப சேவை II வருடம் ரூ.43,730/-

**05.** III ஆம் தரத்திற்குரிய பதவிகள் நிரந்தரமானது.ஓய்வூதியத்துடன் கூடியது.ஓய்வூதிய முறைப்பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

**06. ஆட்சேர்ப்பு செய்யும் முறை**

i). தரம் III ஆட்சேர்ப்பு நேரடியாகவும் , பயிற்சி தரங்களுடன் தொடர்புடைய எழுத்துத் தேர்வின் முடிவுகளின் அடிப்படையில் செய்யப்படும். எழுத்துத் தேர்வின் இரண்டு பாடங்களிலும் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரிகள் பொது நிர்வாக சுற்றறிக்கை 15/90 பிற விதிகளைப் பின்பற்றி விதிமுறைகளின் படி மாவட்ட மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையில் அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் முன்னுரிமை வரிசையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

ii). சித்தியடைவதற்காக ஒரு வினாப்பத்திரத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய குறைந்தபட்ச மதிப்பெண்களின் அளவு 40% ஆகும்.

iii). வரைவாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம்

அ). நுண்ணறிவு பரீட்சை – காலம் 01 மணித்தியாலம் – 100 புள்ளிகள்
விண்ணப்பதாரியின் தர்க்கரீதியான சிந்தனை , முடிவெடுக்கும் திறன் மற்றும் பகுப்பாய்வு செய்யும் திறன் ஆகிய வினாக்களை உள்ளடக்கியது.

ஆ). தொழில்நுட்ப பரீட்சை - காலம் 01 மணித்தியாலம் – 100 புள்ளிகள்
இயற் கணிதம் , வடிவியல் , முக்கோணவியல் பாடங்கள் தொடர்பான அறிவை சோதித்தல்,கட்டிட கட்டுமானப் பொருட்கள் , கட்டிட தொழில்நுட்பம் , கட்டிட சேவைகள் , நில அளவீடு மற்றும் மட்ட அளவீடு , அளவீட்டு அலகுகள் , வரைபடங்களை வாசித்தல் , அறிவியல் கணக்கீடுகள் போன்ற விடயங்கள் தொடர்பான அறிவை சோதிக்கும் வினாத்தாள்.

இப் பரீட்சை , பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமாக நடாத்தப்படும்.கிடைக்கின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரீட்சை நடாத்துகின்ற நகரம் தீர்மானிக்கப்படும். பரீட்சையில் ஆள் அடையாளத்தினை உறுதிபடுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை , செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு அல்லது இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

பொது நேர்காணல் சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்படும். அங்கு எந்த மதிப்பெண்களும் வழங்கப்படமாட்டாது என்பதுடன் உடல் , உள தகைமைகள் மற்றும் தகைமைகளுக்குரிய சான்றிதழ்கள் மாத்திரமே சரிபார்க்கப்படும்.

**07.** விண்ணப்பிக்கும் முறை :-

7.1 இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப A-4 அளவிலான கடதாசிகளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தொடரிலக்கம் 01 முதல் 03 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் இல 04 முதல் 06 வரை இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை தமது கையெழுத்தினாலே நிரப்புதல் வேண்டும்.மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7.2 விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றளிக்கப்பட வேண்டும். எந்தவொரு நிறுவனத்திலிருந்தும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தினை நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த அதிகாரியும் கையொப்பமிட வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரச பாடசாலையின் அதிபர் / ஓய்வு பெற்ற அதிகாரி , பிரிவின் கிராம அதிகாரி , சமாதான நீதவான் , சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட சட்டத்தரணி , அரச சேவையில் நிரந்தர பதவிநிலை அதிகாரி அல்லது பௌத்த விகாரைகளின் விகாராதிபதி அல்லது தலைமை பிக்குகள் அல்லது அன்னிய மத வழிபாட்டுத் தலங்களுக்குரிய பொறுப்பாளர் அல்லது மதகுருமார் பதவியில் குறிப்பிடத்தக்க பதவியை வகிக்கும் நபரின் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

7.3 பரீட்சைக் கட்டணம் ரூ.600/- ஆகும்.இப் பரீட்சைக் கட்டணத்தை **சபரகமுவ மாகாண சபையின் 20.03.02.99 என்ற வருமானத் தலைப்பிற்கு வரவாகுமாறு** சபரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்திற்கு / திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது சபரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் குறித்த கட்டத்தினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்) செலுத்தப்படுகின்ற பரீட்சைக் கட்டணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.அத்துடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அலுவலகங்களுக்கு (தபால் அலுவலகம் , வங்கி ) பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7.4 சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 13.03.2026 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் **“செயலாளர் , சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு , மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி , புதிய நகரம் , இரத்தினபுரி “** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் “**சபரகமுவ மாகாண அரச சேவையின் வரைவாளர் தரம் III / பயிற்சி தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026 “** எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் , பதவிக்குரிய தகைமைகளை பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

7.5 விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலுக்கேற்ப தகமைகள் உள்ளதா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் போதுமான தகமைகள் இல்லை என அறியப்படின் , அவரது அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும். இவ் விண்ணப்ப அறிவித்தலில் அடங்காத ஏனைய விடயங்கள் இருப்பின் அவை தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும். அத்துடன் இவ்வாட்சேர்ப்பு அறிவித்தலின் வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிராகரித்தல் தொடர்பான இறுதித் தீர்மானமும் இவ் ஆணைக்குழுவுக்குரியது.

டபிள்யு.ஆர்.தினீஷா எஸ் ரத்னாயக
செயலாளர்
சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
சபரகமுவ மாகாணம்
.02.2026

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

சபரகமுவ மாகாண சபையின் அரச சேவை ஆணைக்குழுவின் தொழில் நுட்பவியல் சேவையின் வரைவாளர் தரம் III இரண்டு வருட பயிற்சிக் ) வரைவாளர் பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) வரைவாளர் பயிற்சி தரம் / ஆட்சேர்ப்பதற்கான (காலம்திறந்தப் போட்டிப் பரீட்சை-2026

OPEN COMPITITIVE EXAMINATION FOR RECRUITMENT TO POSTDRAFTMEN GRS IN THE TECHNICAL SERVICE OF THE SABARAGAMUWA PROVINCIAL PUBLIC SERVICE DRAFTMEN GRADE III, TRAINEE (ONE YEAR TRAINING PERIOD) AND DRAFTMEN (TWO YEAR TRAINING PERIOD) – 2026

---

[ ]
அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

அறிவிப்பின்படி விண்ணப்பிக்கப்படுகின்ற பதவியின் பெயர் :- [ ]

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் : [ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

சிங்களம் – 1

தமிழ் – 2

01. அ).விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் : - (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ+ம் GUNAWARDHANA M.G.B.S.K.)

……………………………………………………………………………………………………..

ஆ). முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) ……………………………………………………………

இ). முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ………………………………………………

ஈ). தேசிய அடையாள அட்டை இலக்கம் [ | | | | | | | | | ]

உ). தொலைபேசி இலக்கம் [ | | | | | | | | | ]

02. I. நிரந்தர முகவரி: - …………………………………………………………………………………………

II. நிரந்த வதிவிட மாவட்டம் :- இரத்தினபுரி [ ] கேகாலை [ ]

III. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 13.03.2026 சபரகமுவ மாகாணத்தில் நிரந்தர பதிவுக் காலம் :

வருடங்கள் [ ] மாதங்கள் [ ] நாட்கள் [ ]

03. I. பால் :- [ ]

பெண் 1 , ஆண் 0

உரிய இலக்கத்தினை எழுதுக

II. பிறந்த திகதி : -

வருடங்கள் [ | | | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

III. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி 13.03.2026 திகதிக்கு வயது:-

வருடங்கள் [ ] மாதங்கள் [ ] நாட்கள் [ ]

04. கல்வித் தககமை

4.1 கா.பொ.த (சா.த) பரீட்சை தொடர்பான விபரம்:

வருடம் : ............................ சுட்டெண் : ..................................

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

( பெறுபேறுகளின் பிரதியொன்றினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்)

4.2 கா.பொ.த (உ.த) பரீட்சை தொடர்பான விபரம் :

வருடம் : ............................ சுட்டெண் : ..................................

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |

( பெறுபேறுகளின் பிரதியொன்றினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்)

4.3 தொழில்நுட்ப தகைமை :

| நிறுவனம் | பாடநெறி | காலம் | பெறுபேறு | சான்றிதழ் இலக்கம் மற்றும் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

**(செல்லுபடியாகும் திகதி குறிப்பிடப்பட்ட சான்றிதழின் பிரதியொன்றினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்)**

05. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு எண் : ......................................

பரீட்சை கட்டணம் செலுத்திய அலுவலகம் : ...................................................

பற்றுச்சீட்டை பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டவும்.
( பற்றுச் சீட்டின் நிழற்பட பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக் கொள்ளவும் )

06. விண்ணப்பதாரியின் உறுதியுரை

…………………………………… ஆகிய என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கியுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என சான்றுப்படுத்துகின்றேன்.என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனத் தெரிய வந்தால் என்னால் விண்ணப்பிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட நியமனம் தொடர்பாக என்னுடைய உரிமையை கவனத்திற் கொள்ளாததுடன், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் முடியுமென நான் நன்கு அறிவேன்.அத்துடன் பரீட்சை இடம்பெறுவது தொடர்பாக விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் விதிகளுக்கு நான் உடன்படுகின்றேன் என இத்தால் அறிவிக்கினறேன்.

............................. ........................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிபடுத்தல்

(தேவையற்ற வசனத்தை நீக்கவும்)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி./செல்வி./ ................................... என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ,அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................................... ஆந் திகதி வைத்தார் என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

உறுதிபடுத்தும் உத்தியோகத்தர் பெயர் :

கையொப்பம் :

பதவி மற்றும் பதவி முத்திரை :

(இச் சான்றிதழ் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க முப்படையின் அதிகார தரத்திலுள்ள அதிகாரியொருவர் , பொலிஸ் சேவையில் வர்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றில் உள்ள ரூ.240,360/- இற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளமொன்றை பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியில் உள்ள அதிகாரியொருவரினால் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.)

**அரசாங்கத்தில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்கள தலைவர் சான்றிதழ்**

திரு./திருமதி./செல்வி./ ............................................ தற்போது ....................................... அமைச்சில் / திணைக்களத்தில் / நிறுவனத்தில் ............................................ ஆக நிரந்தர ஓய்வூதியமுள்ள பதவியொன்றில் சேவையில் உள்ளார் என்பதனையும் , அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதனையும் , ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்படவில்லை என்பதனையும் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானது என்பதனையும் உறுதிபடுத்துகின்றேன்.இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கேற்ப நிறுவனமொன்றுக்காக தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போதைய பதவியில் இருந்து விடுவிக்கலாம் என்பதனையும் பரிந்துரைக்கின்றேன்.

திகதி .............................................

...............................................

திணைக்களத் தலைவர் கையொப்பம்

(உத்தியோக முத்திரையை வைக்கவும்)